மாலை முரசு முரசம்

31.10.2026

எஸ்.ஐ.ஆர். விவகாரம் :

ராகுல், அகிலேஷுக்கு அமித்ஷா பகிரங்க சவால்!

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் விவாதிக்கத் தயாரா?

புதுடெல்லி, அக்.31

எஸ்ஐஆர் விவகாரத்தில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை என்றும் இது தொடர்பாக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் விவாதிக்கத் தயாரா என்றும் ராகுல், அகிலேஷ் யாதவுக்கு அமித்ஷா பகிரங்க சவால் விடுத்துள்ளார். நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த முகாம் மேற்கொள்ளும் பணி தொடங்கியது. ஏற்கனவே தமிழ்நாடு உள்பட 20 மாநிலங்களில் இந்த பணிகள் முடிந்து விட்டன. மீதமுள்ள மாநிலங்களில் தற்போது சிறப்பு திருத்தம் நடைபெற்று வருகிறது. இதுவரை 13 கோடிக்கும் மேலான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் உயிரிழந்தவர்கள் என்றும், இடம் பெயர்ந்தவர்கள் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஆனால் 2 தேர்தல் ஆணையர்களின் கருத்துக்களை புறந்தள்ளி விட்டு தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாக கடும் விதிகளை சேர்த்ததால் ஏராளமானோர் நீக்கப்பட்டதாகவும், புதிய வாக்காளர்களை சேர்க்க முடியவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. தலைமை தேரதல் ஆணையர் பதவி விலக வேண்டி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவரை பதவிநீக்கம் தொடர்பாக மக்கள் மன்றம் என்ற பெயரில் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த கூட்டம் காங்கிரஸ் தலைவர் கார்கே வீட்டில் நடப்பதாக இருந்தது. ஆனால் டெல்லியில் நேற்று மழை பெய்ததால் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. அந்த கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இதில் இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர். நாளை ராம் லீலா மைதானத்தில் மிகப் பெரிய பொதுக் கூட்டமும் நடைபெறுகிறது. இதில் அனைத்து தரப்பு அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என ராகுல் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் ஞானேஷ்குமார் விவகாரத்தில் ராகுலுக்கும் அகிலேஷுக்கும் அமித்ஷா சவால் விடுத்துள்ளார்.

எஸ்ஐஆர் விவாகரத்தில் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்று கூறியுள்ளார். ஆகவே இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டி விவாதிக்கத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அப்படி சிறப்புக் கூட்டம் கூட்டுவதற்கு ராகுலும் அகிலேஷும் சம்மதிக்க மாட்டார்கள் என்றும் அமித்ஷா கடுமையாக சாடியுள்ளார்.

இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது என்றும் அவர் பதிலடி கொடுத்துள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சட்டம் ஒழுங்கு, சாலைப் பாதுகாப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் த.மஞ்சுளா மற்றும் பலர் உள்ளனர்.

நிதியாண்டின் முதல் 6 மாதங்களில் நிதிப்பற்றாக்குறை 42.1 சதவீதத்தை எட்டியது!

மத்திய அரசு தகவல்!!

புதுடெல்லி, அக்.31

நிதியாண்டின் முதல் 6 மாதங்களில் நிதிப்பற்றாக்குறை 42.1 சதவீதத்தை எட்டியிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் வருவாய் மற்றும் செலவினத்துக்கு இடையேயான இடைவெளி அதாவது நிதிப்பற்றாக்குறை ரூ.16. 96 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டு இருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) 4.3 சதவீதம் ஆகும். இதில் 42.1 சதவீதத்தை நிதியாண்டின் முதல் 6 மாதங்களில் எட்டியிருப்பதாக மத்திய தலைமை கணக்கு கட்டுப்பாட்டாளர் (சி.ஜி.ஏ.) வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது. அதாவது செப்டம்பர் வரையிலான நடப்பு நிதியாண்டின் 6 மாத காலத்தில் நிதிப்ப ற்றாக்குறை ரூ.7,14,413 கோடியாக இருந்ததாக குறி ப்பிடப்ப ட்டு இருக்கிறது. இது முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தை விட அதிகம் ஆகும். கடந்த 202526 ம் ஆண்டு பட்ஜெட்டின் நிதிப்பற்றாக்குறை மதிப் பீட்டில் 36.5 சதவீதத்தை முதல் 6 மாதங்களில் எட் டப்பட்டு இருந்தது குறிப் பிடத்தக்கது. செப்டம்பர் மாத நிலவரப்படி, மத்திய அரசின் நிகர வரி வருவாய் ரூ.12.76 லட்சம் கோடியாக, அதாவது நடப்பு நிதியாண்டின் மதிப்பீட்டில் 44.5 சதவீதமாக இருந்ததாக சி.ஜி.ஏ. அறிக்கையில் மேலும் கூறப்பட்டு உள்ளது.

இது முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் 43.3 சதவீதம் எனவும் அரசு தெரிவித்து உள்ளது. மாதாந்திர கணக்குத் தரவுகளின்படி, 202627ம் ஆண்டுக்கான பட்ஜெட் மதிப்பீடுகளில், மொத்த செலவினம் சுமார் ரூ.25.5 லட்சம் கோடியாக, அதாவது 47.7 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இளைஞர்களையும் பாதிக்கும் வாழ்நாள் பக்க வாதம்!

பக்கவாதம் என்பது முதியவர்களை மட்டுமே பாதிக்கும் நோய் என்று பலர் நம்புகின்றனர். இதன் அடிப்படையிலேயே, இளைஞர்களுக்குத் திடீரெனத் தலைசுற்றல், கை அல்லது கால்களில் உணர்வின்மை, பேசுவதில் சிரமம் அல்லது பார்வை மங்குதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால், அவற்றை பெரும்பாலும் அலட்சியப்படுத்திவிடுகின்றனர். ஆனால், இத்தகைய அறிகுறிகளைப் புறக்கணிப்பது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும்என்றுமருத்துவர்கள்எச்சரிக்கின்றனர்.பக்கவாதம் என்பது முதியவர்களை மட்டுமே பாதிக்கும் நோய் அல்ல என்பதை உலகளாவிய புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. 15 முதல் 49 வயதுக்குட்பட்டவர்களுக்கும் பக்கவாதம் ஏற்படலாம். உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, உடல் பருமன், புகைப்பிடித்தல், மது அருந்துதல், போதிய தூக்கமின்மை, மன அழுத்தம் மற்றும் நீண்ட நேரம் அமர்ந்திருக்கும் வாழ்க்கை முறை போன்றவை பக்கவாதத்துக்கான அபாயத்தை அதிகரிக்கக்கூடும். இதனால்தான், பக்கவாத சிகிச்சையில் ஒவ்வொரு நிமிடமும் முக்கியம் என்பதால், அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவசர மருத்துவ உதவியை நாட வேண்டும்.

இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் பக்கவாதத்தின் அறிகுறிகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருக்கும்." என்கின்றனர் மருத்துவர்கள். பக்கவாதத்தில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. முதலாவது, இஸ்கிமிக் பக்கவாதம். மூளைக்குச் செல்லும் ரத்த நாளத்தில் ரத்த உறைவு ஏற்பட்டு, ரத்த ஓட்டம் தடைபடும்போது ஏற்படுவதை இஸ்கிமிக் பக்கவாதம் என அழைக்கப்படுகிறது. இரண்டாவது, ஹெமரேஜிக் பக்கவாதம்; ரத்த நாளம் வெடித்து, மூளையில் ரத்தப்போக்கு ஏற்படும் போது இது நிகழ்கிறது. இரண்டு வகைப் பக்கவாதங்களுமே தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவை. எனவே, அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுவது அவசியம். இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் பக்கவாதத்தின் அறிகுறிகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருக்கும்.

ஆனால், குழந்தைகளிடம் இதன் அறிகுறிகள் மாறுபடலாம்.உடலின் ஒரு பக்கத்தில் திடீரென ஏற்படும் பலவீனம் அல்லது உணர்வின்மை, பேசுவதில் சிரமம் அல்லது பேச்சு குளறுதல், பார்வையில் திடீர் மாற்றங்கள், நடப்பதில் சிரமம் அல்லது சமநிலையை இழத்தல் ஆகியவை பக்கவாதத்தின் அறிகுறிகளாக இருக்கலாம். இந்த அறிகுறிகள் திடீரெனத் தோன்றினால், அவை தானாகவே சரியாகிவிடும் என்று காத்திருக்காமல் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும். தலைச்சுற்றல், நடப்பதில் தடுமாற்றம், நடக்க இயலாமை அல்லது உடல் சமநிலையை இழத்தல் போன்ற அறிகுறிகள் திடீரென ஏற்பட்டாலோ, தீவிரமாக இருந்தாலோ உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.அதேபோல், ஒரு கண்ணில் திடீரெனப் பார்வை இழப்பு ஏற்படுவது அல்லது பார்வை மங்குவது போன்ற மாற்றங்கள் தென்பட்டாலும் உடனடியாக மருத்துவ உதவியைப் பெற வேண்டும்.

உடலின்ஒருபக்கத்தில்உணர்வின்மைஏற்பட்டாலோ அல்லது ஒரு பக்கத்தில் மற்றொரு பக்கத்தைவிட உணர்வுத்திறன் குறைவாக இருப்பதை உணர்ந்தாலோ தாமதிக்காமல் மருத்துவ உதவியை நாட வேண்டும்" பக்கவாதம் ஏற்பட்ட முதல் நான்கரை மணிநேரம் மிகவும் முக்கியமானது." இந்தக் காலகட்டத்துக்குள், தகுதியான நோயாளிகளுக்கு ரத்த உறைவைக் கரைக்கும் மருந்துகளை வழங்க முடியும். இது மூளைப் பாதிப்பைக் குறைத்து, நோயாளி குணமடைவதற்கான வாய்ப்பை அதிகரிக்க உதவும்" இளைஞர்களுக்குப் பக்கவாதம் ஏற்படாது என்றும், இது முதியவர்களை மட்டுமே பாதிக்கும் நோய் என்றும் பலர் தவறாகக் கருதுகின்றனர். ஆனால், இது உண்மையல்ல. வயது அதிகரிக்கும்போது பக்கவாதம் ஏற்படும் அபாயமும் அதிகரிக்கிறது என்பது உண்மைதான். , எந்த வயதினருக்கும் பக்கவாதம் ஏற்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.இளம் வயதில் பக்கவாதம் ஏற்படுவது ஒருவரின் வாழ்க்கையில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். பக்கவாதம் ஒருவரின் வேலை செய்யும் திறனைப் பாதிப்பதுடன், சுயமாகச் செயல்பட்டு வாழும் ஆற்றலையும் குடும்பத்தைப் பராமரிக்கும் திறனையும் திடீரெனக் குறைக்கக்கூடும். இதனால், அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையும் குடும்பத்தின் எதிர்காலமும் பாதிக்கப்படலாம்.எனவே, இளைஞர்களும் தங்களுக்குப் பக்கவாதம் ஏற்படுவதற்கான அபாயக் காரணிகளை அறிந்துகொள்வதுடன், அவற்றைக்குறைப்பதற்கானதடுப்புநடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

5 தொகுதிகளுக்கும்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

தொகுதிகளிலும் தவெக வெற்றி பெற்றது.

இன்னும் திருச்சி கிழக்கு, விராலிமலை, கரூர், பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகள் காலியாக உள்ளன. இந்த தொகுதிகளில் வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் போடப்பட்டன. அதனால் இடைத்தேர்தல் உடனடியாக நடத்தப்படவில்லை.

இந்நிலையில் எந்த நேரத்திலும் இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்படலாம் என கருதப்படுகிறது. ஆகவே அதற்கு முன்னதாக அந்த 5 தொகுதிகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசு திட்டங்களை நிறைவேற்ற முதல்வர் முடிவு செய்துள்ளார்.

அதன்படி விராலிமலை தொகுதி அடங்கிய புதுக்கோட்டை மாவட்டத்துக்கு நவம்பர் 2 ஆம் தேதி முதல்வர் விஜய் செல்கிறார். அங்கு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

மேலும் புதுப்பிக்கப்பட்ட பேருந்து நிலையத்தையும் திறந்து வைக்கிறார். இதற்காக திருச்சி வரை விமானத்தில் சென்று அங்கிருந்து கார்மூலம் ரோடு ஷோ முறையிலும் சாலை வலம் வருகிறார்.

3 ஆம் தேதி கரூர் மாவட்டத்தில் உள்ள பெருந்துறை தொகுதிக்கு செல்கிறார். அங்கு பிரம்மாண்ட வங்கி கடன் இணைப்பு விழா நடைபெறுகிறது. இதில், 13 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 9,000 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.1,110 கோடி வங்கிக் கடனுதவி வழங்கப்படுகிறது. முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்பங்கேற்று, சுமார் 4,000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இதற்காக, பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நேற்று இரவு உயர்நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்று, விழா ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

முன்னதாக, சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தடைந்து, அங்கிருந்து பெருந்துறை வந்த வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கழக பொதுச்செயலாளர் என். ஆனந்த் ஆகியோருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி, மாவட்ட ஆட்சியர் கந்தசாமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் சுருதி மற்றும் பொதுப்பணித்துறை, மகளிர் திட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். விழா மேடை அமைப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பயனாளிகளுக்கான அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

அம்பாசமுத்திரம் தொகுதி:

நவம்பர் 14 ஆம் தேதி அம்பாசமுத்திரத்துக்கு முதல்வர் விஜய் செல்கிறார். அன்றைய தினம் அங்குள்ள அரசுப் பள்ளியில் குழந்தைகள் தின விழாவை மாணவர்களுடன் சேர்ந்து கொண்டாடுகிறார்.

இனி வருடந்தோறும் குழந்தைகள் தின விழாவில் மாணவர்களுக்கு கேக் வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. அதன் படி குழந்தைகளுக்கு முதல்வர் விஜய் கேக்துண்டுகளை வழங்குவார்.

அடுத்தடுத்து மற்ற தொகுதிகளுக்கும் முதல்வர் விஜய் பயணம்செய்ய உள்ளார்.

ஜெயில் வாசலில்....

1–ம் பக்கத் தொடர்ச்சி

போலீசாரைக் ஏமாற்றிவிட்டு, கைதி ராகவன் மின்னல் வேகத்தில் திடீரென தப்பியோடினார்.

பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர்கள் உடனடியாகக் அவனைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்றனர்.

ஆனால், அதற்குள் அவன் தப்பிச் சென்று தலைமறைவாகிவிட்டான். உச்சக்கட்ட பாதுகாப்பு வளையத்திற்குள் இருக்கும் மத்திய சிறையின் வாசலிலேயே கைதி ஒருவன் துணிகரமாகத் தப்பியோடிய சம்பவம் பாதுகாப்புப் பணியில் இருந்த அதிகாரிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுகுறித்து காவல் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சிறை வளாகப் பகுதி ரேஸ்கோர்ஸ் காவல் எல்லைக்குட்பட்டது என்பதால், ரேஸ் கோர்ஸ் போலீசார் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீவிர விசாரணையைத் தொடங்கினர்.

தப்பியோடிய கைதி ராகவனைப் பிடிக்கத் தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மத்திய சிறை வளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நஞ்சப்பா சாலை, வ.உ.சி. பூங்கா உள்ளிட்ட பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளைப் போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேலும் மாநகர எல்லைகள், பேருந்து நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்களிலும் போலீசார் தீவிர வாகனத் தணிக்கை மேற்கொண்டு தேடி வருகின்றனர்.

தற்போது தப்பியோடிய ராகவன் என்பவர் ஏற்கனவே கடந்த ஜூன் மாதம் போலீஸ் பிடியில் இருந்து தப்பியோடிய அதே பழைய குற்றவாளியா? என்ற அதிர்ச்சித் தகவல் போலீஸ் வட்டாரத்தில் எழுந்துள்ளது. இது பற்றியும் ரேஸ்கோர்ஸ் போலீசார் விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர்.

சமீபத்தில் தேனி மாவட்டத்தில் போலீஸ் பிடியில் இருந்து கைதிகள் சினிமா பாணியில் தப்பியோடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், அதன் சுவடு மறைவதற்குள்தற்போது கோவையிலும் மத்திய சிறை வாசலிலேயே அடுத்தடுத்து கைதி தப்பியோட்டம், பொதுமக்கள் மத்தியிலும் காவல்துறை வட்டாரத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குரூப் 2, 2 ஏ முதல்நிலை தேர்வு நாளை நடைபெறுகிறது!

4.89 லட்சம் பேர் எழுதுகிறார்கள்!!

சென்னை, அக்.31

தமிழ்நாடு அரசு பணியாளர்தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) சார்பில் நடத்தப்படும் குரூப்2 மற்றும் குரூப்2ஏ முதல்நிலைத் தேர்வு நாளை (நவம்பர் 1ந்தேதி) திட்டமிட்டபடி நடைபெறுகிறது.

இந்த தேர்வை தமிழகம் முழுவதும் 4 லட்சத்து 89 ஆயிரத்து 885 பேர் எழுத உள்ளனர். தமிழக அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள குரூப்2 மற்றும் குரூப்2ஏ பிரிவுகளைச் சேர்ந்த 846 பணியிடங்களை நிரப்புவதற்காக இந்த தேர்வு நடத்தப்படுகிறது. இதற்காக தமிழகம் முழுவதும் 4 லட்சத்து 89 ஆயிரத்து 885 பேர் விண்ணப்பித்துள்ளனர். இதன் மூலம் ஒரு காலிப்பணியிடத்திற்கு சராசரியாக 579 பேர் போட்டியிடுகின்றனர்.

இந்த தேர்வு மாநிலம் முழுவதும் 1,647 மையங்களில் நடைபெறுகிறது. சென்னையில் மட்டும் 173 தேர்வு மையங்களில் 51 ஆயிரத்து 721 பேர் தேர்வு எழுதுகின்றனர்.

முதல்நிலைத் தேர்வு நாளை காலை 9.30 மணிக்கு தொடங்கி நண்பகல் 12.30 மணி வரை நடைபெறுகிறது. மொத்தம் 3 மணி நேரம் நடைபெறும் இந்த தேர்வில் 200 கொள்குறி வகை வினாக்கள் இடம்பெறும். மொத்த மதிப்பெண்கள் 300 ஆகும்.

இதில் பொது அறிவு பகுதியில் 75 வினாக்களும், திறனறிவு பகுதியில் 25 வினாக்களும், பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் பகுதியில் 100 வினாக்களும் இடம்பெறும்.

தேர்வர்கள் தங்களது ஹால் டிக்கெட்டை டிஎன்பிஎஸ்சி அதிகாரப்பூர்வ இணையதளமான www.tnpsc.gov.in ல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தேர்வு எழுதச் செல்லும் விண்ணப்பதாரர்கள் ஹால் டிக்கெட் உள்ளிட்டதேவையான ஆவணங்களுடன் தேர்வு மையத்திற்கு உரிய நேரத்தில் செல்லவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியை திட்டியதால் கல்லூரி மாணவி தூக்கிட்டு தற்கொலை!

திருவள்ளூர், அக்.31

செங்குன்றம் அருகே ஆசிரியை திட்டியதால் மன உளைச்சலில் கல்லூரி மாணவி தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார்.

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் அடுத்த அலமாதி ஊராட்சிக்கு உட்பட்ட எடப்பாளையம், என்.எஸ்.கே.கிருஷ்ணன் தெருவைச் சேர்ந்தவர் ஆனந்தன். மெக்கானிக்கான இவரது மகள் ஜெஸ்வினி (17 வயது). இவர், செங்குன்றத்தில் உள்ள தனியார் கல்லூரியில் நர்சிங் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார்.

இந்தநிலையில் கல்லூரியில் படிக்கும், வாலிபர் ஒருவருடன் ஜெஸ்வினிக்கு நட்பு ஏற்பட்டு இருவரும் பேசி வந்ததாக கூறப்படுகிறது. இதனை பார்த்த ஆசிரியை ஒருவர்,



ஜெஸ்வினியை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். இதனால் மனவேதனை அடைந்த ஜெஸ்வினி, நடந்த சம்பவம் குறித்து பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். தொடர்ந்து மனஉளைச்சலில் இருந்து வந்த அவர், நேற்று வீட்டில் உள்ள படுக்கை அறையில் சேலையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்த சோழவரம் போலீசார், மாணவியின் உடலை மீட்டு விசாரணை நடத்தினர்.

மேலும் வழக்குப்பதிவு செய்து, மாணவியின் தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறைத்துறை டி.எஸ்.பி....

1–ம் பக்கத் தொடர்ச்சி

கிருஷ்ணராஜ் கொடுத்திருந்த புகாரின் பேரில் கண்டமனூர் போலீசார் சிறையிலிருந்து தப்பி ஓடிய 17 சிறை கைதிகள் மீதுபல்வேறுபிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து அவர்களை கைது செய்தனர்.

பின்னர் பிரவீன் குமார், ராஜ்குமார், பிரசாத் என்ற லிங்க பிரசாத், திருப்பதி ஆகியோரை பாளையங்கோட்டை சிறைச்சாலைக்கும், சிலம்பரசன், கருப்பசாமி என்ற மதன், கார்த்திக் ராஜா, பொன் முத்து செல்வம் இவர்களை கோயம்புத்தூர் சிறைச்சாலைக்கும், ராஜா சிக்கந்தர், பாண்டி செல்வம் கடலூர் சிறைச்சாலைக்கும் நிஷாந்த், சோலை முகிலீஸ்வரன், தருண்குமார், முத்து இளங்கோவன், சபரிநாதன், மீனாட்சி சுந்தரம் இவர்களை சேலம் சிறைக்கும் ரெஜின் திருச்சி சிறைச்சாலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

17 சிறை கைதிகள் தப்பியதின் எதிரொலி காரணமாக சிறைத்துறை டிஜிபி யாக பணிபுரிந்து வந்த சந்தீப் ராய் ரத்தோர் டான்ஜெட்கோ ஊழல் தடுப்பு பிரிவு டிஜிபி ஆகவும், அமலாக்கப்பிரிவு சிஜடி ஆக இருக்கும் ஏடி ஜிபி சங்கர் சிறைத்துறை கூடுதல் டிஜபி ஆக தமிழக அரசு பணியிடமாற்றம் செய்து உத்தரவிட்டது.

இந்த நிலையில் தேனி மாவட்ட சிறையில் பணி புரிந்து வந்த டி.எஸ்.பி. நாகேஸ்வரன் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார். இதற்கான உத்தரவை மதுரை ஜெயில் எஸ்.பி. பிறப்பி த்துள்ளார்.

பின்னர் அவருக்கு பதிலாக மதுரை சிறை துறையில் பணிபுரிந்து வந்த ஜெய்லர் ராஜேந்திரன் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

TANEJA AEROSPACE AND AVIATION LIMITED

Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India Phone : 91 4347 233 506, Fax : 91 4347 233 414 , E-mail : secretarial@taal.co.in, Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND PERIOD ENDED SEPTEMBER 30, 2026 (₹ LAKH)

Sr. No.	Particulars	Three Months Ended September 30, 2026 (Un-Audited)	Year Ended March 31, 2026 (Audited)	Three Months Ended September 30, 2025 (Un-Audited)
1	Revenue from Operations	1,123.22	4,015.97	969.13
2	Profit before exceptional items and tax	869.07	2,267.17	529.78
3	Profit before tax	869.07	2,250.92	529.78
4	Profit after tax	688.56	1,680.85	386.46
5	Total comprehensive income for the period	694.47	1,862.60	386.46
6	Paid up equity share capital (Face Value Rs. 5 per share)	1,275.03	1,275.03	1,275.03
7	Reserves excluding revaluation reserves	-	14,183.73	-
8	Earnings / (Loss) per share (of INR 5/- each) (not annualised):			
	(a) Basic earnings / (loss) per share (INR)	2.70	6.59	1.52
	(b) Diluted earnings / (loss) per share (INR)	2.70	6.59	1.52

EXTRACT OF THE STATEMENT OF STANDALONE FINANCIAL RESULTS FOR THE QUARTER AND PERIOD ENDED SEPTEMBER 30, 2026 (₹ LAKH)

Particulars	Three Months Ended September 30, 2026 (Un-Audited)	Year Ended March 31, 2026 (Audited)	Three Months Ended September 30, 2025 (Un-Audited)
Revenue from Operations	1,123.22	4,015.97	969.13
Profit before exceptional item and tax	869.07	2,267.23	529.78
Profit before tax	869.07	2,250.98	529.78
Profit after tax	688.56	1,680.91	386.46
Total comprehensive income for the period	694.47	1,862.66	386.46

Notes :
1. The un-audited consolidated financial result and standalone financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at its meeting held on October 30, 2026.
2. The above is an extract of the detailed format of financial results filed with stock exchange under Regulation 33 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirement) Regulation, 2015. The full format for three months and half year ended September 30, 2026 are available on the BSE Limited website (URL: www.bseindia.com) and on company's website (www.taal.co.in). The same can be accessed by scanning the QR code provided below.

Place: Gurugram
Date : October 30, 2026

For and on behalf of the Board of Directors
Rakesh Duda
Managing Director



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் லி.மதுபாலன் தலைமையில் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தேசிய ஒற்றுமைநாள் உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.